**ஒதுக்கீட்டுத் தலைப்பு- 267**

**முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்**

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

i. மாவட்ட மற்றும் பிரதேசங்களில் சிறந்த வழியில் முழுமையான குடிமக்கள் உருவாகுவதை அமுலாக்குவதற்கு.

ii. மாவட்டத்தில் நிர்வாகம் மற்றும் அபிவிருத்திகளை ஒருங்கிணைத்து தலைமை தாங்குதல்

iii. மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் சேவையில் உற்பத்தி மற்றும் தரத்தினை உயரத்துவதற்கு சிறந்த வழியில் அரசாங்க கொள்கைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளை அமுலாக்கல்.

iv. ஆழமான, மனிதாபிமான மற்றும் கணக்கிடக்கூடிய பொது மக்கள் சேவையை உருவாக்குவதற்கு.

v. உத்தியோகத்தரின் இயலளவை வலுப்படுத்தல்.

vi. மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நிதி முகாமைத்துவ முறைமையை முன்னேற்றுவதற்கு.

vii. ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான மாவட்ட மற்றும் பிரதேச பொது மக்கள் நிர்வாக முறைமையை உறுதிப்படுத்துவதற்கு.

viii. மாவட்டத்தில் பொது மக்களின் தேவைகளை திருப்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு.

ix. அரசாங்க சேவைகளின் உற்பத்தி மற்றும் தர சேவைகளை முன்னேற்றுவதற்கு நவீன தொழில்நுட்பத்துடன் முழு சேவைகளையும் அறிமுகப்படுத்தல்.

x. பிரதான நிதிக் குறிகாட்டிகளை அளவிடுவதற்கு.

xi. அமைச்சுக்களால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை செய்வதற்கு.

xii. மாவட்ட மற்றும் பிரதேசங்களில் அரச விழாக்களை நடாத்துதல்.

xiii. மாவட்ட மட்டத்தில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்வதற்கு.

xiv. இடர் முகாமைத்துவம் மற்றும் அனர்த்தங்களை செய்வதற்கு முன் திட்டமிடல் நடவடிக்கைகளை தயாரிப்பதற்கு.

xv. வளங்களின் முறையான பாயன்பாட்டினை உறுதிப்படுத்தல்.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) கரைதுறைப்பற்று
(ஆ) ஒட்டிசுட்டான்
(இ) மாந்தை கிழக்கு
(ஈ) துணுக்காய்
(உ) புதுக்குடியிருப்பு

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 19 ஆந் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச்

சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாவட்ட செயலகத்தின் நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 160,677,000 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 147,224,619 பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் மாவட்ட செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 13,452,381 அல்லது 8.37 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவின வகுதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஒதுக்கீடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 109,450,000 | 113,177,000 | 104,754,211 | 8,422,789 | 7.44 |
| மூலதனம் | 47,500,000 | 47,500,000 | 42,470,408 | 5,029,592 | 10.59 |
| மொத்தம் | **156,950,000** | **160,677,000** | **147,224,619** | **13,452,381** | **8.37** |

**வகைப்படுத்தல் தவறுகள்**

பதினாறு சந்தர்ப்பங்களில் ரூபா 1,951,321 தொகையான மூலதனச் செலவினம் தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டெழும் செலவினத்தின் பல்வேறு கருத்திட்ட குறியீடுகளின் கீழ் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

2012 ஆம் ஆண்டின் போது மாவட்டச் செயலகத்தால் 07 வருமானக் குறியீடுகளிற்காக ரூபா 2.06 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த அதேநேரம் ரூபா 21.07 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில், 03 வருமானக் குறியீடுகளிற்காக எவ்வித வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை அதேநேரம் ஏனைய வருமானக் குறியீடுகளிலிருந்து 27 சதவீதத்திற்கும் 545 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | (குறைவு)/ மேலதிக சேகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 10.03-07-03 | - | 70,302 | 70,302 | |
| 10.03-07-05 | 10,000 | 7,319 | (2,681) | 27 |
| 10.03-07-99 | - | 1,092 | 1,092 | |
| 20.02-01-01 | - | 191,535 | 191,535 | |
| 20.03-01-00 | 100,000 | - | (100,000) | - |
| 20.02-02-99 | 800,000 | 1,304,756 | 504,756 | 63 |
| 20.03-02-06 | | 79,150 | 79,150 | |
| 20.03-02-07 | - | 181,000 | 181,000 | - |
| 20.03-02-13 | - | 603,160 | 603,160 | |
| 20.03-02-14 | - | 12,314,855 | 12,314,855 | |
| 20.03-02-99 | 250,000 | 33,717 | (216,283) | (86.5) |
| 20.03-03-00 | 100,000 | - | (100,000) | - |
| 20.03-99-00 | 500,000 | 3,225,367 | 2,725,367 | 545 |
| 20.04-01-00 | - | 3,058,257 | 3,058,257 | |
| 20.06-02-00 | 300,000 | - | (300,000) | - |

| | | |
|---|---|---|
| **2,060,000** | **21,070,510** | **18,852,210** |

**(இ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு நடவடிக்கைளுக்காக 06 அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களங்களிடமிருந்து மாவட்ட செயலகத்தால் முறையே ரூபா 11,887,625 மற்றும் ரூபா 76,873,978 தொகைகள் உள்ளடங்கலாக ரூபா 88,761,603 மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தது. ஆதில், மீளாய்வாண்டு இறுதிவரை முறையே ரூபா 10,878,058 மற்றும் ரூபா 72,694,278 தொகைகள் உள்ளடங்கலாக ரூபா 83,572,336 ஆன தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 5,189,267 ஆன ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை

26701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதிகள்** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ள படியானது** | **இழிவு எல்லை** | **உள்ள படியானது** | **உச்ச எல்லை** | **உள்ள படியானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 12,700,000 | 12,670,094 | 5,000,000 | 10,108,326 | 42,000,000 | 29,595,301 |

i 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு இணக்கக் கூற்றின்படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 29,595,300 மொத்தமான மீதி நிலுவையாக இருந்ததுடன் நிலுவையாகவிருந்த மீதிகளின் அறவீடு மீதான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் இருந்தது.

ii மாவட்ட செயலக கைநூலின் 2.10.22 ஆம் பிரிவின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 உத்தியோகத்தர்கள் அவர்களுடைய பதவி

வறிதாக்கப்பட்டமையால் ரூபா 17,664 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii சேவையிலிருந்து விலகிச்சென்ற பத்து உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 609,286 கூட்டுமொத்தத் தொகையான இடர் மற்றும் சுனாமி கடன்கள் 03 முதல் 05 வரையான ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடவேண்டி இருந்தது.

**(உ) பொது வைப்பு மற்றும் கட்டுநிதிக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 69,911,025 மற்றும் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0/0/43/0 | 69,911,025 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2008 ஏப்ரல் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின்படி, பனங்கள்ளு அருந்துததிலிருந்து பெறப்பட்ட ரூபா 160,000 தொகையான பிணை வைப்புக்கள் மதுவரித் திணைக்களத்தில் அவற்றினை வைப்புச் செய்வதற்கு பதிலாக மாவட்ட செயலக வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சு செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் உள்ளுராட்சி அதிகாரசபைகளின் தலைவர்கள் என்போருக்கு முகவரியிடப்பட்ட அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின்படி 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக்குறைந்தது அடுத்துவரும் 3 ஆண்டுகளிற்காக ஆண்டு தொடக்கத்தில் மாவட்ட செயலகத்தால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்ட திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

மேற்குறிப்பிட்டபட்ட பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்டட்டவாறு, அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய 2010 மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளிற்காக மாட்டச் செயலகத்தால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறிப்பிட்டபட்ட பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்டட்டவாறு, அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந்திகதிய முறையே அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கங்கள் 402 மற்றும் 402(1) என்பவற்றின்படி நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் மாவட்ட செயலாகத்தால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 27 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

மாவட்ட செயலகம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

### 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஒரு ஆண்டு முதல் 02 ஆண்டுகளாக 3 வகையான சொத்துக்களின் 14 விடயங்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தியிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) வருடாந்த கணிப்பீட்டுச் சபை நடாத்ததல்

2012 ஆம் ஆண்டிற்காக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று மற்றும் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகங்களின் கணிப்பீட்டுச்

சபை அறிக்கைகளில் செய்யப்பட்ட 07 விடய வகைகளின் மிகைகள், 12 விடய வகைகளின் குறைவு மற்றும் ஏனைய சிபார்சுகள் தொடர்பில் பிரமாணங்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 இணக்கமின்மை

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (i) | திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| | 1999 ஏப்ரல் 09 இன் 1/99 ஆம் இலக்கம் | | காசு மற்றும் களஞ்சியங்களைக் கையாளும் உத்தியோகத்தர் களிடமிருந்து பிணைவைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கம் | | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் மீதான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணங்கள் | | |
| | நிதிப்பிரமாண இல 110 | | நட்டங்களிற்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| | நிதிப்பிரமாண இல 756 | | 102 கிராம சேவகர் அலுவலகங்கள் தொடர்பில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.9. நட்டங்களும் சேதங்களும்

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் நட்டங்கள் மற்றும் சேதங்களின் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| விடயங்கள் | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| கணனித் தொகுதி | 02 | 220,000 |
| இரண்டு மின்பிறப்பாக்கிகள் | 02 | 230,000 |
| நிழற்படப் பிரதி இயந்திரம் | 01 | 59,950 |
| மூன்று வாகனங்கள் | 03 | 340,000 |
| | | **849,950** |

## 1.10. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 84 | 73 | 11 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 00 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 284 | 153 | 131 |
| (iv) | ஆரம்ப நிலை | 46 | 27 | 19 |
| | மொத்தம் | 426 | 253 | 173 |

2013 ஆகஸ்ட் 06 இல் உள்ளவாறு நிலவிய 173 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.